# செய்தி வெளியீடு

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

## 2016 இரண்டாம் காலாண்டு

### 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான சேவைத்துறையின் நடவடிக்கைகள் 4.9 சதவீத வளர்ச்சியை பதிவு செய்கிறது.


தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


……………………………………………………………………………………………………

இலங்கையின், 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

இலங்கை, 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் சாதகமல்லாத காலநிலை நிலைமையை எதிர்கொண்டது. இது பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்த காரணமாக இருந்ததிருக்கலாம்.. விவசாய துறையின் நடவடிக்கைகள் 2015 அக்டோபர் இலிருந்து 2016 மே வரை நீடித்த வறண்ட காலநிலை நிலைமை காரணமாக மிகமோசமாக பாதிக்கப்பட்டது. மற்றும் மலைநாடு மற்றும் ஈர வலய பிரதேசங்களில் உயர் மழைவீழ்ச்சி நீடித்தது. மேல் மாகாணம் உயர் மழைவீழ்ச்சியால் பாரிய வெள்ளப் பெருக்குக்காளானது. அத்துடன் மேல் மாகாணத்தின் சுதந்திர வர்த்தக வலயம், இக் காலாண்டுக் காலப் பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளும் மிகமோசமாக பாதிக்கப்பட்டது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2016 இரண்டாம் காலாண்டின் (ஏப்ரல், மே, ஜூன்) நிலையான (2010) விலையில் 2,130,240 ரூபா மில்லியன்களாக அதிகரித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி 2015 இரண்டாம் காலாண்டில் 2,075,805 ரூபா மில்லியன்களாக பதிவு செய்ததுடன், 2016 இரண்டாம் காலாண்டில் 2.6 சதவீத சிறிய அளவிலான நேர் வளர்ச்சி வீதத்தை காட்டுகிறது.

2016 இரண்டாம் காலாண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்குகளை முறையே 7.7 சதவீதம், 26.6 சதவீதம், 55.8 சதவீதம் மற்றும் 9.8 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பொழுதில், விசேடமாக, சேவைகள் நடவடிக்கைகளானது தனது ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமாக 4.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுகின்றதுடன், இவ்வேளையில் 2015 இரண்டாம் காலாண்டில் பதிவு செய்த வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது கைத்தொழில் நடவடிக்கைகளானது 2.2 சதவீத சிற்றளவான வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. விவசாய நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பொழுதில்

முற்று முழுதாக ஒடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் மொத்த நடவடிக்கைகளும் மறை வளர்ச்சியான 5.6 சதவீத விளைவை பதிவு செய்கின்றன.

முந்தைய வருடத்தின் அதற்குரிய காலாண்டுடன் ஒப்பிடும்போது, விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், சேர்க்கப்பட்ட பெறுமதியானது 'நெல் வளர்ச்சி' , 'தேயிலை வளர்ச்சி', 'இறப்பர் வளர்ச்சி', கடல் மீன்பிடி ' என்பவற்றுக்கு முறையே 17.9 சதவீத, 12.2 சதவீத, 8.2 சதவீத, 7.8 சதவீதமாக இக் காலாண்டுப் பகுதியில் குறைந்துள்ளது: இவ்வேளையில் 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி', தேங்காய் உள்ளடங்கலாக மற்றும் 'விலங்கு வளர்ப்பு' 'காடாக்கலும் குத்திகளும்' முறையே 1.0 சதவீத, 1.7 சதவீத, 2.0 சதவீத சிறிய வளர்ச்சி வீதங்களை காட்டுகின்றன.

இந்த காலாண்டில் கைத்தொழில் துறை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நடப்பு விலைகளில் 26.6 சதவீத பங்களிப்பை செய்ததுடன், சிறிய நேர் வளர்ச்சி வீதத்தை ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கையும் பதிவு செய்கிறது. கைத்தொழில் துறையின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்புடன், 2015 இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இக் காலாண்டில் 6.9 சதவீதத்தால் வளர்ச்சியை காட்டியுள்ளது. மேலும், உப பிரிவுகளான, 'மின்வலு,வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்', மற்றும் 'தளபாட உற்பத்தி' முறையே 7.0 சதவீத, 4.4 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை காட்டுகின்றன. மேலும் 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி' என்பன முறையே 0.4 சதவீத, 0.9 சதவீத சிறிய வளர்ச்சியை ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் காணக்கூடியதாகவும், முழு கைத்தொழில் நடவடிக்கைகளில் உயர் பங்களிப்பை கொண்டதாகவும் உள்ளன. குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை 2016 ஆம் காலப் பகுதியில் காட்டுகின்றன. இத்துடன் 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' நடவடிக்கை 4.9 நேர் சதவீத வீழ்ச்சியை இவ் இடைவெளிக் காலத்தை கருதும் போது பதிவு செய்துள்ளது.

மூன்று பிரதான நடவடிக்கைகளில், 2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் சேவைத் துறையின் நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை வழங்குவதுடன், 4.9 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளில் 'தொடர்பாடல்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'கல்விச் சேவைகள்', மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 21.2 சதவீத, 14.5 சதவீத, 15.1 சதவீத, 10.5 சதவீத மற்றும் 3.5 சதவீதத்தை 2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது இது பதிவு செய்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2016 ஆம் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும்புள்ளிவிபரத் திணைக்களம்**